# நாட்டார் வாழ்வியல்



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. கலாவதி
முனைவர் சு. குமரன்

# நாட்டார் வாழ்வியல்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. கலாவதி**<br>**முனைவர் சு. குமரன்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2017 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்**<br>**மகளிர் உயர்கல்வி நிறுவனம்**<br>கோயம்புத்தூர் - 43. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | 18 + 368 = 386 |
| விலை | : | உரூ. 300/- |

ISBN : 978 - 93 - 85267 - 44 - 4


**Aspects of Prosperous life in Folklore**


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. G. Galavathi**<br>**Dr. S. Kumaran** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | December, 2017 |
| Published | : | **Department of Tamil**<br>**Avinashilingam Institute for Home**<br>**Science and Higher Education for**<br>**Women,** Coimbatore - 43. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | 18 + 368 = 386 |
| Prize | : | **Rs. 300/-** |

# பொருளடக்கம்

1. **முனைவர் க. கலாவதி** — 1
சிறப்பு வழிபாட்டு முறை -கொடைவிழா

2. **வி. கலைவாணி** — 10
சிலப்பதிகாரத்தில் நாட்டாறு வாழ்வியல்

3. **பா. கிருத்திகா** — 16
புறநானூற்றில் நடுகல் வழிபாடு

4. **வீ. நதியா** — 22
அகநானூற்றில் நாட்டுப்புறவியல் தாக்கம்

5. **திருமதி பா. நளினிப்ரியா** — 28
இலக்கியங்களில் சிறுதெய்வ வழிபாடு

6. **மா. மஞ்சுளா** — 32
நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளும் அறிவியல்சார் உண்மைகளும்

7. **முனைவர் சி. இலட்சுமணன்** — 36
நாட்டுப்புற நம்பிக்கைகளும் மாந்திரீகச் சுவடிகளும்

8. **தி. பிரகாசி மேரி** — 42
நாட்டார் கைவினைப் பொருட்கள்

9. **திருமதி இரா. சண்முகப்பிரியா** — 46
நாட்டுப்புறக் கதைகள்

10. **முனைவர். வே. தனுஜா பாலவார்** — 52
இனமக்களின் வாழ்வியல் முறைகள்

11. **முனைவர் தா. லிற்றில்மேரி** — 58
நாகர் அம்மன் கதைப்பாடல் காட்டும் வாழ்வியல் புனைவுகள்

12. **முனைவர் க. முருகேசன்** — 63
நாட்டுப்புறத் தெம்மாங்குப் பாடல்களில் உறவுகளும் உணர்வுகளும்

13. **முனைவர் சு. சதீஷ்குமார்** — 71
நாட்டுப்புறவியல் ஆய்வு நூல்களின் முன்னோடி எங்கள் நாட்டுப்புறம்

14. **அ. ரஞ்சனி** — 78
அருள்மிகு மாசாணியம்மன் வரலாறும் வழிபாடும்

15. **ம. சசிகலா** — 83
கருவாச்சி காவியத்தில் நாட்டார் வாழ்வியல்

# 13

# நாட்டுப்புறவியல் ஆய்வு நூல்களின் முன்னோடி எங்கள் நாட்டுப்புறம்

**முனைவர் சு. சதீஷ்குமார்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

பல்துறை வித்தகராக விளங்கிய கோவை கிழாரின் உன்னத படைப்பு எங்கள் நாட்டுப்புறம் என்னும் நூல். இன்றைக்கு நாட்டுப்புறவியல் என்னும் துறை வேகமாக வளர்ந்து வருகின்றது. நாட்டுப்புறவியல் தொடர்பான பல ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இத்துறையின் முன்னோடியாகக் கோவை கிழார் திகழ்ந்துள்ளார். இதனை, 'புதிய ஆய்வுகள் படைத்துத் தமிழுக்கு வளம் சேர்ப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த கோவை கிழாரின் தமிழ்த்தொண்டால் நாட்டுப்புறவியல் (Folklore) துறைக்குக் கிடைத்த நூல் அவர்தம் எங்கள் நாட்டுப்புறம் என்னும் நூலாகும். 1951 இல் வெளியான இந்நூல் இத்துறையில் தோன்றிய முதல்வரிசை நூல்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது. அண்மைக் காலத்தில்தான் இத்துறை வளர்ச்சி பெற்று வருகிறதென்றாலும் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகட்கு முன்னரேயே இத்துறையில் காலூன்றியவர் கோவை கிழார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலைநாடுகளில் ஒரு நூற்றாண்டிற்கு முன்னரேயே இத்துறையில் ஆய்வுகள் நடைபெற்றபோதிலும் நம் நாட்டில் இத்துறை பற்றிய ஆய்வு நீண்டகாலம் கழித்தே தொடங்கியது. நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம் (தே. லூர்து 1976) என்னும் நூலின் முன்னுரையில் பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியம் அவர்கள் நாட்டுப்புற இயல் குறித்த ஆய்வு அன்று இருந்த சூழலைப் பின்வருமாறு குறிப்பார். 'நாட்டுப் பாடல்களைப்பற்றி 1960-இல் முதன்முதல் எம்.லிட். பட்டத்திற்கு கே.பி.எஸ். ஹமீது கட்டுரை சமர்ப்பித்தபோது அதனைச் சீர்தூக்கிய தமிழ்ப் பேராசிரியப் பெருமக்கள் காட்டிய ஏளன உணர்வு இன்று இளைஞர்களாலேயே எழுச்சியாக மாறியிருப்பது மிக்க மகிழ்ச்சி தரும் செய்தி' இவ்வுரையால் இத்துறை பற்றி 1960 ஆம் ஆண்டில் இருந்த உணர்வு புலனாகும். ஆனால் கோவை கிழார் ஏறத்தாழ அதற்குப் பத்தாண்டுகட்கு முன்னரேயே 1951 இல் இத்துறையில் ஒரு நூலைப் படைத்திருக்கின்றார் என்று எண்ணும்போது கோவை கிழாரின் புதிய வரவினைப் போற்றும் புதுமை மன உணர்வைக் காணலாம்'. (எங்கள் நாட்டுப்புறம், பதிப்புரை,